புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் திருவள்ளுவர் ஆண்டு 2051 அக்டோபர் 15, 2020 புரட்சி 19 முழக்கம் 12 விலை: ரூ.3.00

## ‘இப்பப் பாரு... நான் எப்படி ஓடுறேன்னு...’

வீரம் பேசி விட்டு தலை தெறிக்க ஓட்டம் பிடிப்பதற்குக்கூட ஒரு ‘வீரம்’ வேண்டும்; “அடிச்சிட்டல்ல; இப்ப... நான் எப்படி வேகமாக ஓடுறேன்னு மட்டும் பாரு...” என்று வடிவேலு ஒரு படத்தில் வீரத்துடன் கூறுவார். அப்போது வடிவேலு எடுத்த ஓட்டம் கூட – “சும்மா... சாதாரகம் தான் இப்போது நம்ம பா.ஜ.க. ‘ஜீ’க்கள் எடுக்கும் ஓட்டம் இருக்கே... அப்பப்பா... ‘இதை தலைதெறிக்க’ ஓடும் ஓட்டம் என்றும் கூறலாம்.

கடந்த வாரம் தான் பொன்.ராதா கிருஷ்ணன், ‘நானும் அரசியலில்தான் இருக்கேன்’ என்று அடையாளப்படுத்த, ஒரு திரியைக் கொளுத்திப் போட்டார். “நாங்கள் யாருடன் கூட்டணி வைப்போம் என்பதையெல்லாம் இப்ப சொல்ல முடியாது; அது தி.மு.க.வாகக்கூட இருக்கலாம்” என்றார். அவ்வளவுதான்; “பா.ஜ.க. – தி.மு.க. கூட்டணியா” என்று தொலைக்காட்சிகள் ‘அரட்டை கச்சேரி’களை (அதற்கு விவாதம் என்றும் பொருள் கூறலாம்) நடத்தி முடித்து விட்டன. கூட்டணியில் பா.ஜ.க.வுக்காக 60 இடங்களைப் பெறுவோம் என்றார், ஒரு ‘ஜீ’; யார் முதல்வர் என்பதை நாங்கள் தான் முடிவு செய்வோம் என்றார் மற்றொரு ‘ஜீ’. ஒவ்வொரு ‘ஜீ’யின் உளறல்களுக்கும் உடனுக்குடன் ஊடகங்களில் விவாதம்; காதில் புகையே வந்து விட்டது!

இப்போது எதற்கு இந்தக் கதையெல்லாம் என்று கேட்கிறீர்களா? ‘வீரம்’ பேசிய ஒவ்வொரு ‘ஜீ’யும் இப்போது காவித் துண்டை முகக் கவசமாக்கி வாயை மூடிக் கொண்டுள்ளார்கள். சன்னமாக முகக் கவசத்தை விலக்கிக் கொண்டு மெல்லிய குரலில் ஒரே ‘சுருதி’யில் பேசுகிறார்கள். அது என்ன தெரியுமா?

கூட்டணி அ.இ.அ.தி.மு.க.வுடன்தான் என்கிறார்கள் – அத்தனை ‘ஜீ’க்களும் முதலமைச்சர் வேட்பாளர் எடப்பாடி தான்” என்கிறார்கள்.

‘கழகங்கள் இல்லாத தமிழகத்தை உருவாக்குவோம்’ என்று மூச்சுமுட்ட முழங்கினீர்களே அது என்ன ஆச்சு? காற்றோடு கலந்து விட்டதா ஜீ? என்று கேட்டுப் பாருங்கள். பதில் சொல்ல மாட்டார்கள். ரஜினி, பா.ஜ.க.வுக்கு தலைமை ஏற்க வேண்டும் என்று காவிக் கம்பளம் விரித்து அதில் தாமரைப்படம் போட்டு மஞ்சள் குங்குமத்துடன் ஆரத்தியுடன் காத்திருந்தீர்களே, அது என்னவாச்சு? என்று கேட்டுப் பாருங்கள்; பதில் கூற மாட்டார்கள்.

ஆனால் ஒன்றை மட்டும் ‘திரும்பத் திரும்ப’ பேசுகிறார்கள்; “நாங்கள் தமிழ்நாட்டில் பலமாக வளர்ந்து விட்டோம். எங்களை அசைக்க முடியாது; காவல்துறை தேடும் குற்றப் பட்டியலில் இருப்பவர்கள்; ஏற்கனவே கொலை, கொள்ளை மோசடிகளில் ஈடுபட்ட நேர்மையான இந்து ஆன்மிகவாதிகளை தேடிப் பிடித்து கட்சியில் சேர்த்து வருகிறோம்; அது மட்டுமா? சினிமாவில் ஓய்வு பெற்ற முன்னாள் நடிகை நடிகர்கள் எல்லாம் எங்கள் கட்சிக்கு வருகிறார்கள். அவர்கள் தமிழ்நாட்டை ஒரு ‘ரவுண்டு’ அடித்தாலே போதும் ஓட்டுகளை அள்ளி விடுவார்கள் என்று ‘திரும்பத் திரும்ப’ பேசுகிறார்கள். இவையெல்லாம் சும்மா ‘வெத்து வேட்டு’ என்பது தமிழக அரசியலைத் தெரிந்தவர்களுக்கு நன்றாகவே புரியும்.

ஆனால், ‘ஜீ’க்கள் சொல்லாமல் மறைத்து வைத்திருக்கும் ஒரு ‘பலம்’ அவர்கள் கூட்டணியில் இருக்கிறது என்பதை நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். நீதிமன்றங்கள், சி.பி.அய்., அமுலாக்கத் துறை, வருமான வரித் துறை, எல்லாவற்றையும் விட தேர்தல் ஆணையம் என்ற அமைப்புகளை தங்கள் கூட்டணியில் வைத்திருக்கிறார்கள் இது ‘இராமன் சத்தியமான’ உண்மை. அதுமட்டுமா? சீனா ஒழிக; பாகிஸ்தான் ஒழிக; டிரம்ப் வாழ்க’ என்ற ‘தேசபக்த’ முழக்கங்களும் மாபெரும் சக்தியாக அவர்களிடம் கூடுதலாகவே இருக்கிறது.

அதெல்லாம் சரிதான்; இவ்வளவு வலிமையான பலம் ஏன் தமிழகக் கட்சிகளுக்குத் தெரியவில்லை? நாங்கள் பா.ஜ.க.வுடன் கூட்டணி அமைத்து போட்டியிட காத்திருக்கிறோம் என்று தமிழ்நாட்டில் பதிவு செய்துள்ள சுமார் 500 அரசியல் கட்சிகளில் ஒரு ‘லெட்டர்பேட்’ கட்சி கூட இதுவரை அறிவிக்கவில்லையே? பா.ஜ.க.வின் கதவைத் தட்டவில்லையே? ஏதோ, கூட்டணியில் இடம் பிடிக்க போட்டிப் போட்டுக் கொண்டு கியுவில் நிற்பதுபோல பாசாங்கு செய்கிறீர்களே?” என்று கேட்டுப் பாருங்கள் பதிலே வராது.

‘பாரத் மாதாக் கிஜே’ – ‘ஸ்ரீராம பகவானுக்கு ஜே’ என்று கூவிக் கொண்டே ஓடுவார்கள். எப்படி ஓடுறேன்னு மட்டும் பாரு... என்று வடிவேலு ‘ஸ்டைலில்’ இருக்கும் அந்த ஓட்டம்.

**– கோடங்குடி மாரிமுத்து**

# ஒவ்வொரு நாளும் இந்தி, சமஸ்கிருதத் திணிப்புகள்

***இந்தி, சமஸ்கிருத திணிப்புகளை ஒவ்வொரு நாளும் மோடி ஆட்சி அரங்கேற்றி வருகிறது.***

- தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி தன்னிடம் விமான நிலையத்தில் இந்தியில் பேசிய பாதுகாப்புத் துறை அதிகாரி ஒருவரிடம், தனக்கு இந்தி தெரியாது என்று கூறியவுடன், நீங்கள் இந்தியர் தானா என்று கேட்டார் அந்த அதிகாரி.
- ‘ஆயுஷ்’ மருத்துவ அமைச்சகம் நடத்திய ஒரு இணைய கருத்தரங்கில் அந்தத் துறையின் செயலாளர் இந்தி மொழியில் பேசினார். தென்னாட்டிலிருந்து பங்கேற்ற பிரதிநிதிகள் தங்களுக்கு இந்தி தெரியாது; நீங்கள் பேசுவது புரியவில்லை என்றவுடன், தனக்கு இந்தி மட்டும்தான் தெரியும்; புரியாதவர்கள் வெளியேறுங்கள் என்று திமிருடன் பேசினார் அந்த அதிகாரி.
- காந்தி பிறந்த நாள் விழாவையொட்டி மோடி ஆட்சி இணையம் வழியாக தமிழ்நாட்டில் மாணவர் மாணவிகளுக்கு நடத்திய புதிர் போட்டியை, இந்தி, ஆங்கிலத்தில் மட்டும் நடத்தி தமிழை புறக்கணித்தனர்.
- அரியலூர் மாவட்டத்தில் தேசியமய வங்கியின் நிர்வாகி உரிய ஆவணங்களுடன் கடன் கேட்டு வந்த ஓய்வு பெற்ற அரசு மருத்துவரிடம் இந்தியில் பேசினார். தனக்கு இந்தி தெரியாது என்று மருத்துவர் பதில் கூறினார். அப்படியானால் உங்களுக்கு கடன் கிடையாது என்று இறுமாப்புடன் கூறினார் அந்த அதிகாரி.
- தெற்கு இரயில்வே நிர்வாகம், தமிழ்நாட்டில் பயணிகள் முன்பதிவு குறித்து வெளியிடும் அலைபேசி குறுஞ்செய்தியை இந்தியில் மட்டும் வெளியிட்டது.
- ‘நேஷனல் இன்சூரன்ஸ்’ என்ற பொதுத் துறை நிறுவனம், தமிழ்நாட்டிலுள்ள வாடிக்கையாளர்களுக்கு தமிழில் கடிதங்கள் - தகவல்களை வெளியிடவில்லை. இந்தியிலும் ஆங்கிலத்திலும் மட்டுமே வெளியிட்டு வருவதை சுட்டிக்காட்டி நிறுவனத் தலைவருக்கு மார்க்சியக் கம்யூனிஸ்ட் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சு. வெங்கடேசன் கடிதம் எழுதியுள்ளார்.
- 12,000 ஆண்டுகால இந்தியப் பண்பாடு குறித்து ஆய்வு செய்ய மோடி ஆட்சி அமைத்த குழுவில் தென்னாட்டைச் சார்ந்தவர்களோ, வடகிழக்கு மாநிலத்தவர்களோ, தலித், இஸ்லாமிய பிரதிநிதிகளோ இடம் பெறவில்லை. பார்ப்பனர்களே - அதிக இடம் பிடித்துள்ளனர்.
- தமிழ்நாட்டில் நடைபெறும் அகழ்வாய்வுப் பணிகளிலிருந்து ஒன்றிய ஆட்சியின் அகழ்வாய்வுத் துறை, தன்னை முற்றாக விலக்கிக் கொண்டு விட்டது. இப்போது மாநில அரசின் அகழ் வாய்வுத் துறையே ஆய்வுகளை நடத்தி வருகிறது. தமிழர் நாகரிகம் குறித்து ஏராளமான தொன்மச் சான்றுகள் கிடைத்து வருகின்றன. ஆதிச்ச நல்லூரில் நடந்த அகழ்வாய்வுப் பணிகள் குறித்த அறிக்கையை வெளியிட நடுவண் ஆட்சி மறுக்கிறது.
- தொல்லியல் பட்டயப் படிப்புக்கான மாணவர் சேர்க்கைக்கான தகுதியில் சமஸ்கிருதம், பாரசீகம் உள்ளிட்ட செம்மொழிகள் மட்டுமே இடம் பெற்றுள்ள நிலையில் செம்மொழி தகுதி பெற்ற தமிழை நீக்கி நடுவண் ஆட்சி அறிவிக்கை வெளியிட்டுள்ளது. தொடர்ந்து, கடும் எதிர்ப்புக்குப் பிறகு தமிழும் சேர்க்கப்பட்டுள்ளது.
- தொழிலாளர் காப்புறுதிக் கழக (ஈ.எஸ்.அய்.) நிறுவனத்தை தொடர்பு கொண்டு பேசக் கூடிய தொலைபேசி சேவையில் தமிழ்மொழி இல்லை. இந்தி, ஆங்கிலத்தில் தான் பேச முடியும். பல இலட்சம் பேர் தொடர்பு கொள்ளக் கூடிய தொலைபேசியில் தமிழ் இல்லை. தொழிலாளர்கள் போர்க்கொடி உயர்த்தியுள்ளனர்.

இப்படி ஒவ்வொரு நாளும் தமிழ் புறக்கணிப்பு; சமஸ்கிருதம், இந்தித் திணிப்புகள் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன.

# பெரியார் சிலைக்கு கூண்டு போடாதே: சென்னை மாவட்டக் கழகம் ஆர்ப்பாட்டம்



கிண்டி கத்திப்பாரா அருகில் உள்ள பெரியார் சிலைக்கு மாநகராட்சி சார்பில் கூண்டு அமைக்கப்பட்டுள்ளது. பெரியாரின் சிலைக்கு கூண்டு அமைக்கப்பட்டதை அகற்றக்கூறி காவல்துறையிடம் பேச்சுவார்த்தை நடந்தது. காவல்துறை சார்பில் எந்தவித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினால், 07.10.2020 அன்று மாலை 3 மணியளவில் கிண்டி கத்திப்பாரா பெரியார் சிலை அருகில் திராவிடர் விடுதலைக் கழகம் தென் சென்னை மாவட்ட செயலாளர் உமாபதி தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தியது.

ஆர்ப்பாட்டத்தில் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், மாவட்ட தலைவர் வேழவேந்தன், வழக்கறிஞர் துரை அருண், வடசென்னை மாவட்ட தலைவர் ஏசுகுமார், தென்சென்னை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சுகுமாறன், தலைமைக் குழு உறுப்பினர் அய்யனார், செங்கல்பட்டு மாவட்ட செயலாளர் தினேஷ் மற்றும் மாவட்டக் கழகத் தோழர்கள் 50 பேர் பங்கேற்றேனர். மற்றும் சென்னை கழகத் தோழர்களும் கலந்து கொண்டனர். வெல்ஃபேர் பார்ட்டி ஆஃப் இன்டியா அமைப்பினரும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

பெரியாரின் சிலைக்கு அமைக்கப்பட்டுள்ள கூண்டு அகற்றப்படும் வரை தொடர் போராட்டம் நடைபெறும் என்று மாவட்ட செயலாளர் இரா. உமாபதி ஆர்ப்பாட்டத்தில் அறிவித்தார்.

தலையங்கம்

## தலித் பெண்கள் மீதான ஒடுக்குமுறைகள்

கிராமக் கட்டமைப்புகளில் சட்டங்களின் ஆட்சி நடப்பதில்லை. ஜாதியமே தனது அதிகாரத்தைக் கொடூரமாகத் திணித்து வருகிறது. தமிழ்நாடும் இதில் விதிவிலக்கு அல்ல. ஒப்பீட்டளவில் தமிழகத்தின் பெருமை பேசலாமே தவிர, இதை ‘கள்ள மவுனத்துடன்’ கடந்து போக முயற்சிக்கக் கூடாது, எதிர்வினைகளை முன்னெடுக்க வேண்டும். கடலூர் மாவட்டம் புவனகிரி அருகே உள்ள தெற்கு திட்டை கிராமத்தில் ஊராட்சி மன்றத் தலைவியாக தேர்வு செய்யப்பட்ட தலித் சமூகத்தைச் சார்ந்த ராஜேஸ்வரி சரவண குமார் என்ற பெண், பஞ்சாயத்து ஜாதிவெறி துணைத் தலைவரால், தரையில் உட்கார வைக்கப்பட்டுள்ளார். அதேபோல் திருவள்ளூர் மாவட்டத்தில் ஊராடசி மன்ற தலித் சமூக பெண் தலைவர், ‘சுதந்திர நாளில்’ தேசியக் கொடியை ஏற்ற ஆதிக்க ஜாதி வெறியர்களால் தடுக்கப்பட்டுள்ளார். வன்கொடுமை தடுப்புச் சட்டத்துக்கு எதிரான இந்த ‘தீண்டாமை’யை அரசு நிர்வாகத்துக்குக் கொண்டு செல்லத் தவறிய ஊராட்சி மன்ற செயலாளராக இருந்த பெண், வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட் டுள்ளார். இவை வெளிச்சத்துக்கு வந்த ‘வன்கொடுமைகள்’. பல கிராம பஞ்சாயத்துகளில் தலித் பெண்கள் ஒடுக்குமுறைக் குள்ளாகிக் கொண்டிருக்கிறார்கள் என்பதே எதார்த்தம்.

திண்டுக்கல் மாவட்டம் வடமதுரையில் முடிதிருத்தும் சமுதாயத்தைச் சார்ந்த 12 வயது சிறுமி, கும்பல் பாலுறவு வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டு, கடந்த ஆண்டு படுகொலை செய்யப்பட்டார். ‘நான் தான் பாலியல் வல்லுறவு செய்து கொலை செய்தேன்’ என்று ஒப்புதல் வாக்குமூலம் தந்த கிருபானந்தம் என்ற குற்றவாளி, திண்டுக்கல் மகளிர் நீதிமன்றத்தால் சாட்சியங்கள் இல்லை என்று விடுதலை செய்யப்பட்டுள்ளார். தீர்ப்புக்கு எதிராக தமிழ்நாடு முழுதும் 3 இலட்சம் முடிதிருத்தும் கடைகளை அடைத்து தொழிலாளர்கள் போராட்டம் நடத்தியுள்ளனர். அரசு இந்த வழக்கை மேல்முறையீடு செய்ய வேண்டும் என்ற நியாயமான கோரிக்கைகள் வலுத்து வருகின்றன.

தலித் மற்றும் சமூகத்தின் ஒடுக்கப்பட்ட பிரிவிலிருந்து வரும் பெண்கள் மீதான பாலுறவு வன்முறை, தீண்டாமைக் கொடுமைகளை பெண்களுக்கு எதிரான பெண்ணுரிமைக் கண்ணோட்டத்தில் மட்டும் அணுகுவது சரியான பார்வையாக இருக்க முடியாது. மாறாக, இதில் பொதிந்து நிற்கும் ஜாதிய ஒடுக்குமுறைகளோடு இணைத்துப் பார்க்க வேண்டும். புதுடில்லியில் ஓடும் பேருந்தில் நிர்பயா கொடூரமாக பாலுறவு வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்த சம்பவம் நாட்டையே உலுக்கியது. ஆனால் தலித் பெண்கள் மீதான வன்கொடுமை – பாலுறவு வன்முறைகள் நாட்டின் ‘மனசாட்சி’யை அசைப்பதுகூட இல்லை என்பதற்கு என்ன காரணம்? கற்புத் தூய்மை – ஜாதித் தூய்மையை பெண்கள் மீது சுமத்தும் பார்ப்பனிய ஜாதிக் கட்டமைப்பு, அந்தத் தூய்மைகளிலிருந்து தலித் மற்றும் ஒடுக்கப்பட்ட சமூகத்தை ஒதுக்கி விடுகிறது. அன்றாட வாழ்வுக்கு – காடுகளுக்கும் – கட்டுமானப் பணிகளுக்கும் செல்ல வேண்டிய இந்தப் பெண்கள், ஆதிக்க ஜாதியினருக்கு எளிதாகக் கிடைக்கக் கூடிய ‘பாலியல் நுகர்வு பொருள்களாகவே’ ஜாதிய இந்து சமூகம் பார்க்கிறது. நீதிமன்றங்களும், காவல்துறையும், ஊடகங்களும், அதிகார வர்க்கமும் தங்கள் பொதுப் புத்திகளில் ஜாதிய சிந்தனைகளையே சுமந்து நிற்கின்றன.

பெண்கள் – இரண்டாம்தர குடிமக்களாகவும், குடும்ப கட்டமைப்பு, ஜாதிய கட்டமைப்புகளைக் காப்பாற்ற வேண்டிய கடமைகளுக்காகவே பிறவி எடுத்தவர் களாகவுமே கலாச்சாரங்கள் – சடங்குகள் – ஆச்சாரங்கள் – பழக்கவழக்கங்கள் – நடைமுறைகள் நிலைநிறுத்தப் பட்டுள்ளன. பொருளாதார சுதந்திரம் – பெண்களை ஓரளவு அடிமைத்தளையிலிருந்து விடுவித்திருப்பது உண்மை. ஆனால் ஜாதியக் கட்டமைப்பு அவர்களின் பொருளாதார சுதந்திரத்துக்குப் பிறகும் தொடர்ந்து தடைக் கல்லாகவே நீடித்து வருகிறது.

பார்ப்பனிய சீரழிவு கலாச்சாரத்தைப் புனிதமாகவும், அதையே தங்களின் பெண்மைக்குரிய அடையாளமாக பார்ப்பன உயர்ஜாதி இடைநிலை ஜாதியப் பெண்கள் கருதுகிறார்கள். அதன் காரணமாக படி நிலையில் தங்களுக்குக் கீழான ஜாதிய அடுக்கில் சிக்கி நிற்கும் பெண்களை தங்களைப் போலவே கருதுகிற மனநிலை இல்லை.

பெண்ணுரிமைக்காகக் குரல் கொடுக்கக் கூடிய சமூகக் கவலையுள்ள மாற்றத்தை விரும்பும் அனைவருமே பெண்கள் மீதான ஆணாதிக்க வன்முறை என்ற எல்லையோடு நின்று விடாமல், ஜாதிய அமைப்புக்கும் பெண்ணடிமையை நியாயப்படுத்தும் சாஸ்திர, சடங்கு, சம்பிரதாயங் களுக்கும் புனிதமாகப் போற்றப்படும் மதவாதத்துக்கும் எதிராகக் குரல் கொடுக்க முன் வர வேண்டும்.

நிலவுடைமையும் நிலக் குவியலும் முற்றாக தகர்க்கப்படும் போதே ஜாதியத்தின் ஆணிவேர்களை அழிக்க முடியும் என்ற சித்தாந்தப் பார்வை மட்டும் இந்த ஜாதி சமூகத்தில் மாற்றத்தைக் கொண்டு வந்து விடாது என்பதை கடந்த கால வரலாறுகள் உணர்த்தி வருகின்றன.

தலித் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களிடம் நில உரிமைகள் வந்து சேர்ந்தாலும் அந்த உரிமைகளை அவர்கள் தக்க வைத்துக் கொள்ள முடியாத சமூகச் சூழலில் கெட்டித் தட்டி கிடக்கிறது. உடைமைகளுக்கு உரித்தான பெண்களும் ஜாதியம் திணித்த பண்பாடுகளிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ளத் தயாராக இல்லை என்பதையும் கண்கூடாகவே பார்த்து வருகிறோம். எனவே ஜாதிய சீரழிவு கலாச்சாரம், சடங்கு, மதங்களின் கொடூரங்களைத் தோலுரித்துப் பேசாமல் கடந்து போகும் தத்துவார்த்த நிலைப்பாடுகள் மறுபரிசீலனைக்கு உள்ளாக்கப்பட வேண்டும்.

உள்ளாட்சிகளில் பெண்களுக்கும் தலித் பெண்களுக்கும் இடஒதுக்கீடு என்ற உரிமை சட்டம் வந்தது உரிமைகளுக்கான முதல் திறவுகோல். இந்தச் சட்டம் உயிர்ப்புடன் செயல்பட சமூகத்தின் ஜாதிய மனநிலைக்கு எதிரான தொடர் போராட்டத்தை முன்னெடுக்கும் போதுதான் சட்டத்தின் நோக்கத்தை நோக்கி முன்னேறிச் செல்ல முடியும். இந்த இடத்தில் ஓட்டு வாங்கும் அரசியல் கட்சிகளைவிட சமுதாய மாற்றத்துக்காகக் களத்தில் நிற்கும் இயக்கங்களின் முக்கியத்துவம் மேலும் கூடுதலாகிறது என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

# தேசிய சட்டக் கல்லூரிகளில் ‘ஓபிசி’ ஒதுக்கீடு மறுப்பு

தேசிய சட்டப் பல்கலைக் கழகங்களில் 2020-21ஆம் ஆண்டுக்கான மாணவர் சேர்க்கையில் பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீடு புறக்கணிக்கப்பட்டுள்ளது. இதை சுட்டிக்காட்டி தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு, மத்திய கல்வி அமைச்சர் ரமேஷ் போத்தியாலுக்கு கடிதம் எழுதியுள்ளார். மத்திய கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப் பட்டோருக்கு 27 சதவீத இட ஒதுக்கீடு வழங்கும் சட்டம் 2006ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்டுவிட்டது. பல்கலைக் கழக மான்யக் குழு, இதை துணை வேந்தர்கள் உறுதி செய்ய வேண்டும் என்று வலியுறுத்திய நிலையிலும் 13 தேசிய சட்டப் பல்கலைக்கழகங்கள் அதை மீறி செயல் பட்டுள்ளன.

ஏற்கனவே மருத்துவ உயர் படிப்புக்கான ‘அகில இந்திய தொகுப்பில்’ பிற்படுத்தப் பட்டோர் இடஒதுக்கீட்டை மறுத்தார்கள். இப்போது சட்டப் படிப்பிலும் கைவைத்து விட்டார்கள்.

தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணை யத்துக்கு சட்ட அங்கீகாரம் நாங்கள் தான் கொடுத்தாம் என்று கூறும் பா.ஜ.க.வினர் இதற்கு என்ன பதில் கூறப் போகிறார்கள்?

பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடு களில் அலட்சியம் காட்டும் நடுவண் ஆட்சி, உயர் ஜாதி ஏழைகளுக்கான இட ஒதுக்கீட்டில் மட்டும் தீவிரமாகவும் செலுத்தி வருகிறது. புதுவை ‘ஜிப்மர்’ மருத்துவக் கல்லூரியிலேயே நடப்பு ஆண்டிலேயே உயர்ஜாதி ஏழைகளுக்கு 10 சதவீத இடஒதுக்கீட்டை அமுல்படுத்த உத்தரவிட்டுள்ளதோடு அதற்காக மருத்துவக் கல்லூரி இடங்களையும் 200லிருந்து 249 ஆக உயர்த்தியிருக்கிறது. பொதுவாக மருத்துவ கல்லூரிகளில் கூடுதல் இடம் ஒதுக்கும்போது அதற்கான கட்டமைப்புகளை விரிவாக்க குறைந்தது ஓராண்டு காலம் ஆகும். அதைப் பற்றி கவலைப்படாமல் அந்த அதீத ஆர்வத்துடன் இந்தப் பிரச்சினையில் நடுவண் ஆட்சி செயல்பட்டு வருகிறது.

## தமிழ்நாட்டுக்கே தலைகுனிவு

### காவல்துறையில் பெரியாரிஸ்டுகளாக இருப்பது குற்றமா?

கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த 3 காவலர்கள் கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்குப் பணியிட மாற்றம் செய்யப்பட்டதன் பின்னணியில் அவர்கள் கருப்புச் சட்டை அணிந்து பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய சம்பவம் இருப்பதாகக் கூறப்படுகிறது. கடலூர் மாவட்டம் கடலூர் போக்குவரத்து முதல்நிலைக் காவலர் எஸ்.ரஞ்சித், கடலூர் புதுநகர் காவல் நிலையக் காவலர் டி.ரங்கராஜன் மற்றும் திருப்பாதிரிப்புலியூர் காவல் நிலையக் காவலர் ஜி.அசோக் ஆகியோர் கருப்புச் சட்டை அணிந்து அண்மையில் கடலூரில் உள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, அதைப் புகைப்படமாக எடுத்து சமூக வலைதளங்களில் தங்கள் நண்பர்கள் குழுவில் பகிர்ந்ததாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில் 3 காவலர்களையும் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் ஸ்ரீஅபிநவ், கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்குப் பணியிட மாற்றம் செய்து கடந்த 6-ம் தேதி உத்தரவு பிறப்பித் துள்ளார். இதுகுறித்து சக காவலர்கள் மத்தியில் பல்வேறு யூகங்கள் பரிமாறப்படுவதோடு விவாதங் களும் நடைபெற்று வருகின்றன. 3 பேரையும் பணியிட மாற்றம் செய்ததற்குப் பின்னணியில் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்ததுதான் காரணம் எனக் கூறப்படுகிறது. ஆனால், அவர்கள் சீருடையிலோ அல்லது பணி நேரத்திலோ தங்களுக்கு விருப்பமான தலைவருக்கு மரியாதை செலுத்தவில்லை. மாறாக மாற்று உடையில்தான் மரியாதை செலுத்தியுள்ளனர்.

“பெரியார் என்ன தீவிரவாதியா, அவருக்கு மரியாதை செலுத்துவதில் என்ன தவறு?” என்ற யூகத்தின் அடிப்படையில் விவாதங்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இது தொடர்பாக மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் ஸ்ரீஅபிநவிடம் கேட்டபோது, நிர்வாகக் காரணங்களின் அடிப்படையில், விழுப்புரம் சரக டிஐஜி உத்தரவின் பேரில் 3 பேரும் பணியிட மாற்றம் செய்யப்பட்டதாகத் தெரிவித்தார்.

இதையடுத்து, விழுப்புரம் சரக டிஐஜி எழிலரசனிடம் கேட்டபோது, “பெரியார் மரியாதைக்கு உரியவரே. எனவே அவர்கள் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்ததற்காகவோ, மரியாதை செலுத்தியதற்காகவோ அவர்கள் பணியிட மாற்றம் செய்யப்படவில்லை. அதைத் தாண்டி வேறு சில செயல்களில் ஈடுபட்டதாலேயே பணியிட மாற்றம் செய்யப்பட்டனர்” என்றார்.

தமிழக அரசு அலுவலகங்களில் மாட்டக்கூடிய அரசியல் சார்பற்றவர்களின் படங்களாக பெரியார், திருவள்ளுவர் படங்கள் மட்டுமே அங்கீகரிக்கப்பட்டுள்ளன. பெரியார் பிறந்த நாள் நினைவு நாளில் அரசு சார்பில் அவர்களது சிலைகளுக்கு மாலை அணிவிக்கப்படுவதோடு, அரசு சார்பில் ஏடுகளில் விளம்பரங்களும் வெளியிடப்படுகின்றன. இந்தியாவில் அரசியல் பதவி வகிக்காத தலைவருக்கு முதல்முறையாக அரசு மரியாதையுடன் இறுதி நிகழ்வுகள் நடத்தப்பட்டது காந்தியடிகளுக்குத்தான். இரண்டாவதாக, பெரியாருக்கு, கலைஞர் ஆட்சி அரசு மரியாதையுடன் இறுதி நிகழ்வுகளை நடத்தி பெருமை சேர்த்தது.

நிர்வாகக் காரணங்களுக்காகவே இவர்கள் மாற்றப்பட்டார்கள் என்று இப்போது அதிகாரிகள் விளக்கம் தருவது போலி சமாதானம். பெரியார் சிலைகளுக்கு மாலை போட்ட 3 காவல்துறையினரில் ஒருவர் போக்குவரத்துத் துறைப் பிரிவில் பணியாற்றுகிறவர். நிர்வாகக் காரணங்கள், மாலை போட்ட இந்த மூன்று பேருக்கு மட்டுமே தான் இப்போது உருவாகி யிருக்கிறதா? வெளி மாநில காவல் துறை அதிகாரி ‘இந்துத்துவா’ துறையாக காவல்துறையை மாற்றும் நிர்வாகப் பணிகளுக்கு இந்த ‘பெரியாரிஸ்டுகள்’ முட்டுக்கட்டையாக இருப்பார்கள் என்ற நிர்வாகக் காரணமாக வேண்டுமானால் இருக்கலாம்.

தமிழக முதல்வர் என்ன செய்ய போகிறார்? தமிழ்நாட்டில் நடப்பது இவர்கள் கூறும் ‘திராவிட’ ஆட்சியா? அல்லது ‘பாரதிய சரணாகதி’ கட்சியா?

## பா.ஜ.க. ஊது குழல் – ரிபப்ளிக் தொலைக்காட்சி நடத்தும் கோஸ்வாமி நடத்திய ‘ரேட்டிங்’ மோசடி

இந்துத்துவா பேர்வழியும், ‘ரிபப்ளிக் தொலைக்காட்சி’ முதலாளியுமான பார்ப்பன அர்னாப் கோஸ்வாமி, தொலைக்காட்சி மதிப்பீட்டு புள்ளி எனப்படும் டிஆர்பி (Television Rating Point) மதிப்பை அதிகரித்துக் காட்ட இலஞ்ச முறைகேட்டில் ஈடுபட்டது அம்பல மாகி இருக்கிறது.

குறிப்பாக, பொதுமக்களுக்கு லஞ்சம் கொடுத்து, அர்னாப் கோஸ்வாமி தனது டிவி நிகழ்ச்சிகளை பார்க்கச் செய்துள்ளதாக மும்பை காவல்துறை குற்றம் சாட்டியுள்ளது. எந்தெந்த டிவி சேனல்களை, மக்கள் அதிகம் பார்க்கிறார்கள் என்பதன் அடிப்படையில் டிவி சேனல்களுக்கான செல்வாக்கு (டிஆர்பி) கணக்கிடப்படுகிறது. இதற்கேற்பவேவிளம்பர வருவாய் உள்ளிட்டவையும் கிடைக்கும் என்பதால் டிஆர்பி ரேட்டை அதிகரிக்க டிவி சேனல்கள் பல்வேறு யுக்திகளை கையாள்வது உண்டு.

அந்தவகையில், அர்னாப் கோஸ்வாமியின் தலைமையில் இயங்கும் ரிபப்ளிக் தொலைக் காட்சியால், பக்த் மராத்தி மற்றும் பாக்ஸ் சினிமா ஆகியமராத்தி சேனல்களை மட்டுமே பார்க்க பொதுமக்களுக்கு ‘ஹன்சா’ என்ற நிறுவனம் மூலம் லஞ்சமாக பணம் அளிக்கப் பட்டுள்ளது.அதாவது பணத்தை பெற்றவர்கள் எந்நேரமும் தொலைக்காட்சியை ஆன்செய்து, அதில் ரிபப்ளிக், பக்த் மராத்தி, பாக்ஸ் சினிமா சேனல்களைஓடவிட வேண்டும். இதற்காக ஒவ்வொரு வீட்டுக்கும் மாதந்தோறும் ரூ. 400 முதல் ரூ. 500 வரை லஞ்சம் வழங்கப்பட் டுள்ளது. இந்த முறைகேடு தற்போது வெளிச்சத்திற்கு வந்துள்ள நிலையில், விளம்பர வருவாயை அதிகரிக்க டிஆர்பி ரேட்டிங்கை போலியாக அதிகரித்து காட்டியதாக ரிபப்ளிக் தொலைக்காட்சி உள்ளிட்ட 3 தொலைக்காட்சிகள் மீது மும்பை காவல்துறை வழக்கு தொடர்ந்து உள்ளது. அவர்களில் 2 பேர் கைது செய்யப் பட்டுள்ளனர். அர்னாப் கோஸ்வாமியும் விரைவில் விசாரிக்கப்படுவார் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

இதனிடையே, ரிபப்ளிக் தொலைக்காட்சி தலைமை ஆசிரியர் அர்னாப்கோஸ்வாமியும் விசாரிக்கப்படுவாரா? என்ற கேள்விக்கு இது தொடர்பாக பேட்டி அளித்துள்ள மும்பை காவல்துறை ஆணையர் பரம்பீர்சிங், “முறை கேட்டில் சம்பந்தப்பட்டவர், எவ்வளவு பெரிய உயரத்தில் இருந்தாலும், எவ்வளவு பெரிய ஆளாக இருந்தாலும் கேள்வி கேட்கப் படுவார்கள். அவர்கள் தப்பிக்க முடியாது” என்று கூறியுள்ளார்.

இதே போன்ற ‘ரேட்டிங்’ மோசடிகளை இங்கே பா.ஜ.க.வுக்காக ‘யு டியூப்’ சேனர்களை நடத்தும் மாரிதாஸ் போன்ற பேர்வழிகளும் செய்தது ஏதோ, இலட்சக்கணக்கானோர் தங்களைப் பின்பற்றுவதாக பாசாங்கு செய்து வருகின்றனர்.

## வரலாற்றுச் சான்றுகளுடன் கொளத்தூர் மணி உரை (2)

# வ.உ.சி.யின் சுதேசி கப்பல் கம்பெனிக்கு – பெரியார் பங்குத் தொகை வழங்கி, நிதியும் திரட்டித் தந்தார்

***05.09.2020 அன்று தமிழக மக்கள் முன்னணி ஒருங்கிணைத்த வ.உ.சி. பிறந்த நாள் இணைய வழி கருத்தரங்கத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆற்றிய உரை.***

தமிழக வரலாற்றில் பார்ப்பனரல்லாதார் இயக்கம் வீரியம் கொண்டதற்கு சேரன்மாதேவி குருகுலப் போராட்டமும் ஒரு காரணம். அந்த சேரன்மாதேவி குருகுலத்திற்கு 31 ஏக்கர் நிலத்தைத் தன் சொந்த பணத்தில் வாங்கிக் கொடுத்தவர் கானாடு காத்தான் வை.சு. சண்முகம். ஆனால் குருகுலத்தில் பார்ப்பனரல்லாதார் குழந்தைகளை பாகுபடுத்தி நடத்துகிறார்கள் என்ற செய்தி தெரிந்தவுடன் கடுமையான எதிர்ப்புகள் கிளம்புகிறது. வரதராஜுலு நாயுடுவும், பெரியாரும் கடுமையாக எதிர்க்கிறார்கள். வைக்கம் போராட்டமும் சேரன்மாதேவிப் போராட்டமும் ஏறக்குறைய ஒரே காலகட்டத்தில் நடந்து கொண்டிருக்கிறது. அதற்கான கலந்துரையாடல்களெல்லாம் கானாடுகாத்தான் சண்முகம் இல்லத்தில் தான் தொடர்ந்து நடைபெற்றது. சுயமரியாதை இயக்கத்தில் இயங்கியவரும்கூட. 1935இல் அவரது மகள் பார்வதி, அவரது திருமண மேடையிலேயே, பெரியாரிடம் நான் தாலிக் கட்டிக் கொள்ளமாட்டேன்; எனக்குக் தாலி கட்டுவதாக இருந்தால் நானும் மாப்பிள்ளைக்குத் தாலிகட்டுவேன் எனக் கூறி தாலியை மறுத்தவர். சேரன்மாதேவி குருகுலத்துக்கு எந்த சண்முகம் நிலத்தை வாங்கிக் கொடுத்தாரோ அவரேதான் ஞான சூரியன் என்ற ஒரு புத்தகத்தையும் தன்செலவில் வெளியிட்டார். அதற்கு முன்னுரையை வ.உ.சி எழுதுகிறார். ஞான சூரியனைப் பற்றி கூறுகிறார், அவன் வடமொழி வேதங்களிலும், மனுதர்ம சாஸ்திரங்களிலும், காமிகாகமம் முதலிய ஸ்லோகங்களை எடுத்துக் கூறி பொருத்தமான கதைகளைக் கூறியும் ஆரியரின் இழிதகைகளையும், சாதிய வேறுபாடுகளையும் நன்கு விளக்குகின்றான். அவ்வேதம் முதலியவற்றைத் தமவெனக் கொள் வோரும், அவற்றில் மதிப்பேனும் விருப்பேனும் உடையோரும் ஞானசூரியனைப் படிப்பாராயின் அவற்றைத் தமவெனக் கொள்ளார், மதியார், விரும்பார்;

“பிராமணர்களின் யாகங்களிலும் விருந்துகளிலும் பன்றியூன், எருமையூன், பசுவூன் முதலிய பலவகை ஊன்களை உண்டும், பனங்கள் முதலியபலவகைக் கள்களைப் பானஞ் செய்து வந்தவர்களென்றும், சகோதரன் மனைவியிடத்தும், விதவையிடத்தும், குதிரை யிடத்தும், குழந்தைகள்பெற்றுச் சந்ததி விருத்தி செய்து வந்தவர்களென்றும்,மேற்படி வேதம் முதலியவற்றிலிருந்து மேற்கோள்கள் எடுத்துக் காட்டி காட்டி, ருஜு செய்திருக்கிறான். தாம் மதிக்கப்படுவதற்குரிய ஒரு சாதியார் என்று சொல்லிக்கொள்ள விரும்புவாராயின், பிராமணர், மேற்படி வேதம் முதலியவற்றை அக்கினி பகவானுக்கு ஆகுதி செய்வது இன்றியமையாதது” என்று எழுதியுள்ளார். பார்ப்பனர்கள் அனைத்தையும் தீயில் போட்டு எரிப்பார்கள், யாகம் என்ற பெயரால். அதை குத்தூசி குருசாமி Spirtual Post Office என்பார். யாகத் தீயில் போட்டால் அவையனைத்தும் நேரடியாக கடவுளுக்கும், முன்னோருக்கும் போய் சேரும் என்று பார்ப்பனர்கள் கூறுவதால். அதுபோல வடமொழி வேதங்களையும் மனுசாஸ்திரம் ஆகியன இரண்டையும் தீயில் போட்டு எரிப்பதே நமது முதல் கடமை என்கிறார் வ.உ.சி.

அவற்றைக் காட்டித்தான் “இந்து சமயம் என்பதன் பொய்களையும் புரட்டுகளையும், ஆபாசங்களையும் நம்பவைப்பதோடு, அச்சமயப் பெயரால் செய்யப் படும் சடங்குகளின் வாயிலாகப் பிராமணரல்லா தார்கள் தாழ்த்தப்படுவதையும் கூறுகிறது” என்று எழுதுகிறார். மேலும், “ வடமொழி யாகமங்களிற் சிலவற்றைத் தமவெனக் கொண்டு, பிறப்பால் சாதி வேற்றுமைகள் கற்பித்தும், சிவாலயங்களிற் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து வணங்கி வருகிற சைவர்களும் ‘ஞான சூரியன்’ கிரகணத்திலிருந்து தப்பவில்லை. தாம் மதிக்கப்படுகிற ஒரு சாதியார் என்று சொல்லிக் கொள்ள விரும்புவாராயின், அச்சைவர் வடமொழி ஆகமங்களைத் தமவெனக் கொள்ளும் தவறை ஒழித்தலும் சிவாலயங்கள் சிலவற்றில் காணப்படும் சிவலிங்க உருவினை மாற்றலும் இன்றியமையாதவை” என்கிறார். மற்றொரு கருத்தாக சாதி பேதமே காணாத திருக்குறள் தமிழ் மக்களிடத்திலும், சிவஞான போத சித்தாந்த சைவத் தமிழ் மக்களிடத்திலும் ஞான சூரியன் செல்லாதிருப்பது தகுதியே” என்கிறார்.



- இந்து மதம் பொய் - புரட்டு ஆபாசங்களை நம்ப வைக்கிறது என்றார் வ.உ.சி.
- மனுஸ்மிருதியை கடவுளே எழுதினாலும் கண்டிக்க வேண்டியது தான் என்றார்.
- சிவாலயத்தில் சிவலிங்க வழிபாடு செய்யும் சைவர்களையும் கண்டித்தார்.

இவ்வணிந்துரையின் வாயிலாக இந்து மதம், வடமொழி வேதங்கள் ஆகியவற்றை மட்டுமின்றி, தாம் பிறந்த சைவ சமயத்தையும் சாடுகிறார் வ.உ.சி.

1927 இல் திராவிடர் கழகம் என்று ஒரு அமைப்பு விருதுநகரில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. பெரியார் 1944 இல் தான் திராவிடர் கழகம் என நீதிக் கட்சியின் பெயரை மாற்றினார். ஆனால், 1927இலேயே விருதை சிவஞான யோகி என்ற ஒருவர், 1927இல் கோவில் பட்டியில் அவர் நடத்திவந்த திராவிடர் கழகத்தின் 18ஆவது ஆண்டுவிழா மாநாட்டை நடத்தியுள்ளார்.

அந்த மாநாட்டிற்கு பெரியார், வ.உ.சி., இராவணப் பெரியார் என்ற நூலை ஆங்கிலத்தில் படைத்தளித்த ஆங்கிலப் பேராசிரியர் எம்.எஸ். பூரணலிங்கப் பிள்ளை ஆகியோரெல்லாம் அந்த மாநாட்டில் கலந்து கொள்கின்றனர். வ.உ.சி அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு தன்னுடைய கருத்துக்களையும் பதிவு செய்துள்ளார். சுயமரியாதை இயக்கம் போன்றவற்றைப் பற்றி வ.உ.சி அந்த மாநாட்டில் பேசுகிறார். பெரியாரும் கூட ஆரியர், திராவிடர் பற்றிப் பேசுகிறார். எப்போது ஆரியர்கள் சங்கம் ஆரம்பித்தார்களோ அப்போதே திராவிடர் சங்கமும் தேவையாகிவிட்டது என்பதையெல்லாம் கூறிப் பெரியார் பேசுகிறார். அவ்வுரையின் தொடக்கத்தில், “எனது நண்பரும், அரசியல் தலைவருமான திருவாளர் வி.ஓ. சிதம்பரம்பிள்ளை அவர்கள் சொல்லியவைகள் யாவும் என்னிடமுள்ள அன்பினால் அல்லாது அவ்வளவும் உண்மையென்று தாங்கள் நம்பிவிடக் கூடாது. என்னை அவர் தலைவர் என்று சொன்னதற்காக நான் மிகுதியும் வெட்கப் படுகிறேன். அவர் வங்காளப் பிரிவினையின் போது தமிழ்நாட்டில், சிறப்பாக இந்த ஜில்லாவில் அரும்பெரும் தலைவராய் இருந்து நடத்திய பெரும் கிளர்ச்சியின்போது நான் உல்லாசத்துடன் விடலைப் புருஷனாய் விளையாடிக் கொண்டிருந்தேன். அவரையும், அவர் போன்றோரையும் கண்டே பொதுத் தொண்டில் இறங்கினேன்” என்றும் பெரியார் கூறியுள்ளார். எனவே, வ.உ.சி தொடர்ந்து சுயமரியாதை இயக்கத்திற்கு ஆதரவாகவே இருந்து வந்திருக்கிறார்.

பெரியாரும் அவர்மீது கொண்டிருந்த அளவு கடந்த நம்பிக்கையின் காரணமாகவே, வ.உ.சி சுதேசிக் கப்பல் முயற்சியில் இறங்கியபோது, தமது குடும்பத்தின் சார்பாக ரூ.5,000உம், ஈரோடுவாழ் இஸ்லாமியர்கள் சார்பாக ரூ.5,000உம், மேலும் தனது தொடர்புகள் வழியாக மேலும் ரூ.20,000உம் திரட்டி மொத்தம் ரூ.35,000த்தை பங்குத் தொகையாக அளித்துள்ளார் என்பதை மற்றொரு உரையில் பெரியார் குறிப்பிட்டுள்ளார்.

சைவர்களுக்கு வ.உ.சி மீதும் கோவம் இருந்தது. ஏனென்றால் சுயமரியாதை சைவர்கள் என்றே சில பேரை அவர்கள் விலக்கி வைத்திருந்தார்கள். பெரியாரோடு தொடர்பு கொண்டிருந்தவர்களை அப்படி விலக்கி வைத்திருந்தார்கள். வ.உ.சியை மட்டுமல்ல; சொ. முருகப்பா, கி.ஆ.பெ.விசுவநாதம், கே.ஆர்.பாலசுப்பிரமணியம், மணி திருநாவுக்கரசு முதலியார், கா.அப்பாதுரை போன்றவர்களையும் சுயமரியாதை சைவர்கள் என்று சைவர்கள் ஒதுக்கி வைத்திருந்தார்கள். வ.உ.சி.அவர்கள் எழுதிய சிவஞான போது உரையைக் கூட அவர்களெல்லாம் ஏற்றுக் கொள்ளவில்லை. வ.உ.சி. அவர்கள் 1928இல் தேவக்கோட்டையில் மாணவர் சங்க ஆண்டு விழா ஒன்றில் பேசுகிறார், மனுநீதி கண்ட சோழனைப் பற்றி கூறியபொழுது இப்போதிருக்கும் மனுஸ்மிருதியை நடத்திக் காட்டியமைக்காகவே ‘மனுநீதி கண்ட சோழன்’ என்று பெயர் வந்ததென்ற பொருள்படும்படியே சேக்கிழார் கூறினாரென்று கூறினார்கள். அவர் அப்பொருட்படி கூறியிருப்பா ராயின் அவர் மனுஸ்மிருதியைப் படிக்கவில்லை என்றுதான் கூறவேண்டும். எந்த நூலானாலும் குற்றமிருக்குமானால் அதனைத் தள்ளத் தயங்கக் கூடாது. பிழையிருக்குமானால் … வள்ளுவரல்ல, சிவபெருமானே கூறினாலும் தள்ள வேண்டியது தான். கடவுளே எழுதினார் என்று கூறப்படும் நூலிலும் பிழை இருக்குமானால் அதனையும் தள்ள வேண்டியதுதான். வேதத்தில் பிழை இருக்குமானால் திருத்த வேண்டியது தான். சைவத்திலும் அப்படியே தான். எந்த நூலில் பிழைகள் காணப்படுகின்றனவோ இருக்கிறதோ அவைகளைச் சீர்திருத்த வேண்டுவது இன்றியமையாததாகும் என்று அக்கூட்டத்தில் பேசுகிறார். வேடிக்கையாகவும் சிலவற்றைப் பேசி யிருக்கிறார், திருவள்ளுவரைப் பற்றி,

“திருவள்ளுவர் ஒரு கவி, ஒப்பற்ற அறிஞர், நானும் அவரைக் கடவுளென்றே போற்றுகிறேன். அவர் நூலில் வாளென்றும், வில்லென்றும், வேலென்றும் இருக்கிறதேயன்றித் துப்பாக்கியென்றாவது, பீரங்கி யென்றாவது இல்லை. இப்பொழுது யுத்தத்திற்கு சாதனங்களாக துப்பாக்கியும், பீரங்கியுமே இருக்கின்றன. யுத்தத்திற்கு செல்ல வேண்டிய அவசியம் நேரிடின் என் செய்வது? வள்ளுவர் துப்பாக்கியைப் பற்றியும், பீரங்கியைப்பற்றியும் எதுவும் சொல்லவில்லை. எனவே இச்சாதனங்களைக் கொண்டு போர் புரிய மாட்டேன். வள்ளுவருக்கு என்ன புத்தி இல்லையா? அவரைவிட நாமெல்லாம் மேதாவிகளாகி விட்டோமா! என்று ஒருவன் இப்போது கூறிக்கொண்டுஇருப்பானானால் அது எவ்வளவு பெரிய மூடத்தனம்என்பதை நீங்களே யாசித்துப் பாருங்கள்.” என்று கூறுகிறார். சைவர்களுக்கு ஏன் கோபம் வந்தது என்று புரிகிறதா?

மற்றொன்று, “தென்புலத்தார் கடன் ஓம்புதல் என்பதற்கு பிதுர்க்கடன் செய்தல் என்றே பொருள் வைத்துக் கொள்வோம். அப்பொழுதும் குறிப்பிட்ட வகுப்பாருக்கு வெள்ளி லோட்டா, தங்கத் தட்டு கொடுக்க வேண்டும் என்று காணப்படவில்லையே? சபிண்டி, திதி முதலியவை செய்ய வேண்டும் என்று சொன்னால், ‘அய்யா, இது எங்கள் அப்பனுக்குப் போகாது; நாங்கள்இப்போது விழித்துக் கொண் டோம்; இனி ஏமாற்றமுடியாது’ என்று கூறி விடுங்கள். கொசு யானையை விழுங்கி விட்டது என்று சொன்னால் அதை நம்ப முடியுமா?” என்று பார்ப்பன சடங்குகளை விலக்குங்கள் என்று காரைக்குடி சொற்பொழிவில் பேசுகிறார். பார்ப்பனர்கள் நம்மை எப்படி ஏமாற்றுகிறார்கள் என்று ஒரு எடுத்துக்காட்டையும் கூறுகிறார், “நண்பர் தியாகராஜ செட்டியார் மனைவியுடன் பர்மாவிற்கு சென்று வந்திருக்கிறார். அதற்காக அவரை ஜாதியை விட்டு விலக்க வேண்டும் என்று சில இடங்களில் கூறப்படுகிறதாம். இது எவ்வளவு அறியாமை. மனைவியுடன் கப்பலேறிச் சென்றதற்காக ஒரு வகுப்பாருக்கு 2000, 3000 கொடுத்து பிராயச்சித்தம் செய்து கொள்வதா? பிராயச்சித்தம் என்பதெல்லாம் நமக்குத்தான், அவர்களுக்கென்றால் வேதப் பிரமாணம் இருக்கிறது; அந்த நாயனார் அப்படிச் சொல்லியிருக்கிறார், இந்த நாயனார் இப்படிச் சொல்லியிருக்கிறார்களென்று கூறிவிடுவார்கள். பொதுக் கோயில்களில் அனைவருக்கும் சம உரிமை வேண்டும்; லஞ்சம் வாங்காத நீதிபதியிடம் தரகர்கள் வேண்டாம்”. என பார்ப்பனர்களுக்கு எதிராக சாட்டையை சுழற்று கிறார் வ.உ.சி. காங்கிரஸை விட்டு வெளியேறியதன் அடுத்த ஆண்டு 1926 டிசம்பரில் பெரியாரோடு ஒரு மாநாட்டிற்கு செல்கிறார். பிராமணர் அல்லாதோர் மாநாடு என்று அந்த மாநாடு மதுரையில் கூட்டப்படுகிறது. அதில் வ.உ.சி பங்கேற்கிறார். பெரியார் அப்போது, நீதிக்கட்சியை மட்டுமல்லாமல் காங்கிரசில் இருந்த பார்ப்பனரல்லாதோரையும் வாருங்கள் என்று அழைப்பு கொடுத்திருந்தார். அந்த அழைப்பில், நீதிக்கட்சிக்காரர்களைக் கிண்டல் செய்வதைப் போல நீங்கள், பிராமணரல்லாதார் என்றால் 5 விழுக்காடு கூட இல்லாத இராஜாக் களையும், மிராசுதாரர்களையும், ஜமீன்தார்களையும் நினைத்துக் கொண்டு வராதீர்கள். 95 விழுக்காடு உள்ள ஏழைகளும், உழைப்பாளிகளும், பாமரர்களும் சேர்ந்துதான் பிராமணரல்லாதார். இதனை மனதில் கொண்டு வாருங்கள்; அதற்கான திட்டம் தீட்டுவோம் என்று அந்த நிகழ்விற்கு முன்பான அறிக்கையில் பெரியார் எழுதுகிறார்.

அந்த மாநாட்டில், “இந்து கோவில்களில் இந்துக்கள் என்று சொல்லப்படும் எல்லா வகுப்பாருக்கும் பிரவேசத்திலும், பூஜையிலும், தொழுகையிலும் சம உரிமை உண்டு என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது” என்றும், சென்னை

(4ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# கறுப்பர் கூட்டம் மீதான அடக்குமுறை கருத்துரிமைக்கு எதிரானது: ‘காலச் சுவடு’ கண்டனம்

*கறுப்பர் கூட்டம் மீதான ஒடுக்கு முறைகள் கருத்து சுதந்திரத்துக்கு எதிரானது என்று ‘காலச் சுவடு’ மாத இதழ் (ஆகஸ்ட்) எழுதிய தலையங்கம்.*

கறுப்பர் கூட்டம் யூட்டியூப்’ இந்துக் கடவுள்களை இழிவுபடுத்தும் விதத்தில் கருத்துகளை வெளி யிட்டதாகவும் கந்தசஷ்டிக் கவசத்தின் வரிகளைத் திரித்துக் கூறியதாகவும் இந்து அமைப்புகள் சிலவும் பாஜகவின் வழக்கறிஞர் பிரிவுத் தலைவர் பால் கனகராஜும் சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் புகார் அளித்தனர். அதன்பேரில் மத்திய குற்றப் புலனாய்வு சைபர் க்ரைம் போலீசார் அய்ந்து பிரிவுகளின் கீழ் கறுப்பர் கூட்டம் மீது வழக்குப் பதிவு செய்தனர். அதன் அலுவலகமும், ஸ்டுடியோவும் முடக்கப்பட்டுள்ளன. செந்தில்வாசன் என்பவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். நிகழ்ச்சியை வழங்கிய நாத்திகன் என்ற சுரேந்தரும் சரண் அடைந்திருக்கிறார். கறுப்பர் கூட்டம் அலைவரிசையின் அனைத்துக் காணொளிகளும் தற்போது நீக்கப்பட்டிருக்கின்றன.

கறுப்பர் கூட்டம் மீது தொடுக்கப் பட்டுள்ள புகார்களைக் கருத்துச் சுதந்திரம், ஊடகச் சுதந்திரம் ஆகிய வற்றை முடக்கும் நோக்காகவே கருத வேண்டியிருக்கிறது. புராணங்கள், மனுஸ்மிருதி, சமஸ்கிருத வசனங் களுக்கான விளக்கங்கள், ஆர்எஸ்எஸ் ஷாகாக்கள் பற்றிய கடும் விமர்சனம், குழந்தைபிடிச் செயற்பாடுகள் என இந்துத்துவ எதிர்ப்புக் கருத்துக்களைத் தமது காணொளிகளில் வெளிப் படுத்தியது கறுப்பர் கூட்டம்.

இந்து அமைப்புகளும் பாஜகவும் வரும் **தேர்தலில் திமுகவைச் சுற்றி வளைக்கும் ஒரு இராஜ தந்திரமாகத் தான் இதைக் கையில் எடுத்தனவா என்ற சந்தேகம் எழவே செய்கிறது.** மனத்தைப் புண்படுத்துதல், வன்முறை போன்ற சொல்லாடல்களால் இந்தக் கருத்துகளை எதிர்கொண்டன இந்து அமைப்புகள். கறுப்பர் கூட்டத்தின் மேல் தொடுக்கப்பட்டிருக்கும் குற்றச் சாட்டுக்கு அவர்கள் தாமாகவே பொறுப்பேற்று வருத்தம் தெரிவித்துத் தமது தளத்திலிருந்து காணொளியை நீக்குவதாகவும் பதிவு ஒன்றை வெளியிட்டு இருந்தார்கள். ஆனால் இந்த அறிவிப்புக்குப் பிறகு தான் கறுப்பர் கூட்டத்தின் மீது அபவாதக் கருத்துக்கள் பரப்பப்பட்டன. அவர்கள் முஸ்லீம்- கிறிஸ்துவ கைக்கூலிகள் என்று அவதூறுகளும் வசைகளும் வாரி இறைக்கப்பட்டன. அதைத் தொடர்ந்தே இந்தக் கைதும் முடக்க நடவடிக்கையும்!

இரண்டு செய்திகளை இங்கு குறிப்பிட வேண்டும். மற்றவர் ஏற்க முடியாத கருத்தாக இருப்பினும் ஒருவருக்குத் தன் கருத்தை வெளி யிடுவதற்கான உரிமை உண்டு. அதுவே கருத்துச் சுதந்திரம். அதை விரும்பா தோர் நீதிமன்றத்தை நாடலாம். ஆனால் கைது செய்வதோ முடக்குவதோ கூடாது. **கறுப்பர் கூட்டம் செயல்பாட்டாளர்களை விரட்டி விரட்டிக் கைது செய் திருப்பதும் குடும்பத்தினரைத் துன்புறுத்தி இருப்பதும், ’குற்றம்’ இழைத்தவர்போல் நிற்க வைத்துப் படம் எடுத்து ஊடகங்களில் வெளியிட்டு இருப்பதும் மனித உரிமை மீறலாகும்.** அத்தோடு கறுப்பர் கூட்டம் சானலில் இருந்த வீடியோக்களை போலீசாரே நீக்கியிருப்பது பெரும் பிழையாகும். கருத்துச் சுதந்திரம் அடிப்படையில் இது கடுமையாக எதிர்க்கப்பட வேண்டும்.

இது ஒரு கருத்தியல் குழுவின் நடவடிக்கை. இதற்குப் பின்னால் பெரும் திட்டம் இருக்க வேண்டிய அவசியமில்லை. அவர்கள் பார்வை யில் எதிர்காலத்தில் மாற்றங்கள் வரலாம்; வராமலும் போகலாம். ஆனால் இதற்காக அந்த இளையர் களின் எதிர்கால வாழ்க்கையை மொத்தமாக முடக்கக் கூடிய வழக்குகளைப் பின்னுவது கொடும் வன்முறை; மோசமான முன்னு தாரணம். காலகாலத்திற்கும் மாற்றுக் கருத்துக்களை எழவிடாமல் செய்யக் கூடிய போக்கு அது.

தமக்கு எதிரான குரல்கள் ஊடகங்களில் எழாமல் தடுக்கவே இந்து பாஜக அமைப்புகள் இந்த நாசகார வேலைகளில் ஈடுபட்டு வருகின்றன. சுதந்திர உரையாடல் வெளிகளை மட்டுப்படுத்துதல், தமக்கு எதிரான குரல்களை களையெடுத்தல் போன்ற செயல்பாடுகள் மிக வெளிப்படையாகவே தமிழ் ஊடகச் சூழலில் நிகழத் தொடங்கிவிட்டன. தம்முடைய கைக்கு அடக்கமாகத் தமிழக ஆட்சியாளர்கள் இருப்பதைப் பெரும் வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்கின்றன இந்துத்துவச் சக்திகள். தம் ஆட்சி முறையைக் கொண்டு அதிமுக கூடப் பெறமுடியாத பலாபலன்களை இந்துத்துவம் பெற்று கொண்டாடி வருகிறது.

இருண்ட இந்தக் கொரோனா காலகட்டத்திலும் ஜனநாயகச் சக்திகளும் மனிதாபிமானச் சக்திகளும் கருத்துரிமைக்கும் ஊடகச் சுதந்திரத்திற்கும் ஆதரவாக நிற்க வேண்டியது அவசியமானதும் அடிப்படையானதுமாகும்.

எதிர்க் கருத்தாளர்கள் ஒடுக்கப் படுவது ஜனநாயகத்தின் வீழ்ச்சிக்கும் சகமனிதர் மேலான வெறுப்புக்குமே வழிகோலும்.

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

சட்டசபையில் இரண்டு முறை நிறைவேற்றப்பட்ட இதுமத தர்மபரிபாலன மசோதாவை இம்மாநாடு முழுமனதோடு வரவேற்று ஆதரிப்பதோடு, சட்டப்படிக்குண்டான சம்மதம் கொடுக்க வேண்டியது அவசியம் என்று வைசிராய் பிரபுவிற்குத் தெரிவித்துக் கொள்கிறது என்றும் தீர்மானம் போடுகிறார் பெரியார். அதற்கு முன்பே நீதிக்கட்சி 1925இல் மசோதாஒன்றினை நிறைவேற்றுகிறது; அதற்கு வைசிராய் ஒப்புதல் அளிக்கவில்லை அதனால் பெரியார் 1926 இல் அம்மாநாட்டில் தீர்மானம் போடுகிறார். ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று. மற்றொரு தீர்மானம், தங்களை விட பிறவியில் உயர்ந்த வகுப்பார் என்ற எண்ணத்தின் பேரில் வேறு வகுப்பாரைக் கொண்டு செய்து கொண்டிருப்பது, நாமே நம்மை தாழ்ந்த வகுப்பாரென்று ஒப்புக்கொள்வதாய் இருப்பதாலும் இவ்வித மனப்பான்மையே நமது சுயமரியாதையை அழிப்பதற்கு ஆதாரமாய் இருப்பதாலும் இனி இவ்வழக்கத்தை அடியோடு ஒழிக்க வேண்டுமென்று இம்மாநாடு தீர்மானிக்கிறது என்று தீர்மானம் போடப்படுகிறது. இந்த மாநாட்டில் தீர்மானங்களை ஆதரித்து விளக்கி வ.உ.சி பேசுகிறார்.

(தொடரும்)

# கழக மகளிர் நடத்திய இணைய வழி நிகழ்வுகள்

பெரியார்-மணியம்மை திருமணம் குறித்த பொய் விமர்சனங்களை முறியடிக்கும் விதமாக,‘சுயமரியாதை வாழ்வே சுகவாழ்வு’ என்ற பெரியாரின் கூற்றை உறுதியேற்று திரவிடர் விடுதலைக் கழகப் பெண் தோழர்கள் ஜூலை 9ஆம் நாளான பெரியார்-மணியம்மை திருமண நாளன்று தங்கள் பெரியாரியல் குடும்ப வாழ்வு எந்த அளவிற்கு சுயமரியாதையும், பகுத்தறிவையும் கற்றுத் தருகிறது என்பதனை விளக்கி 4-5 நிமிட காணொளிகளாக பேசி கருஞ்சட்டைப் பெண்கள் முகநூல் குழுவில் பதிவேற்றினர். மணிமொழி - பெங்களூர், இசைமதி - கோவை, சங்கீதா - மடத்துக்குளம், சுதா - கொளத்தூர், கோகிலா - வனவாசி, வீரக்கண்ணி - மதுரை. ஜோதி - சென்னிமலை, சங்கீதா - திருப்பூர். தேன்மொழி - மேட்டூர், இரண்யா - சேலம். கீதா - மேட்டூர், கவிப்பிரியா - சென்னிமலை ஆகிய தோழர்கள் காணொளிகளில் பேசினர்.

செப்டம்பர் 17 தந்தை பெரியாரின் 142ஆவது பிறந்தநாளையொட்டி 20.09.2020 மாலை 6 மணிக்கு’பெண்கள் மீதான கற்பிதங்களை கட்டுடைப்போம்’ என்ற தலைப்பில் சிறப்பு இணைய வழிக் கருத்தரங்கம் நடைபெற்றது. கோபி மணிமொழி நிகழ்வை ஒருங்கிணைத்தார். இசைமதி - கோவை, சுதா - கொளத்தூர், சிவகாமி - திருப்பூர், மணிமேகலை - ஈரோடு ஆகிய தோழர்கள் கருத்துரை வழங்கினர். இறுதியாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிறைவுரை வழங்கினார்.

## வினா – விடை

- எடப்பாடி பழனிச்சாமியை முதல்வராக ஏற்கும் கட்சிகளே அ.இ.அ.தி.மு.க. கூட்டணியில் இடம் பெற முடியும்.
  **- அ.தி.மு.க. துணை ஒருங்கிணைப்பாளர் முனுசாமி**

  அதோடு நிறுத்திடாதீங்க... எடப்பாடியை முதலமைச்சராக ஏற்கும் வாக்காளர்கள் மட்டுமே இனி தமிழ் நாட்டில் இடம் பெற முடியும்னு ஒரே போடா போட்டுடுங்க!

- மோடி தனது வெளிநாட்டுப் பயணத்துக்காக வாங்கியுள்ள புதிய விமானத்தின் விலை ரூ.8500 கோடி. **- செய்தி**

  விமானத்துக்குள்ளேயே யோகா நடத்தலாம்; மயிலுக்குத் தீனி போடலாம்; தேவைப்பட்டால் நாடாளுமன்றத்தையே கூட்டி மசோதாக்களை விவாதம் இல்லாமல் நிறைவேற்றும் வசதி எல்லாம் இருக்கும் போலிருக்கு!

- யாருடன் வேண்டுமானாலும் பா.ஜ.க. கூட்டணி அமைக்கும் என்று பேசிய பொன். ராதாகிருஷ்ணன், இரண்டே நாளில் முதல்வர் வேட்பாளர் பழனிச்சாமி அ.தி.மு.க.வுடன் தான் கூட்டணி என்று குரலை மாற்றிக் கொண்டார். **- செய்தி**

  எதுக்கு இப்படி மாத்தி மாத்திப் பேசுறீங்க; எங்க கூட்டணி எப்போதுமே அந்தந்த மாநில ஆளுநர்களுடன் தான் என்று ஒரே வரியில் முடிச்சுடுங்க.

- கொரானா பரவுவதால் மதப் பண்டிகைகளை பாதுகாப்புடன் மக்கள் கொண்டாட வேண்டும். **- மத்திய அமைச்சர் ஹர்ஷவர்தன்**

  ஆமாம், பகவானுக்கு படையல் போடும்போது முகக்கவசம் போடுங்கள்; தீபார்த்தனை செய்யும்போது சானிட்டைசர் கொண்டு கை கழுவுங்கள்; ‘பகவான்’களிடமிருந்து இடைவெளிவிட்டு தூரத்தில் நின்று நமஸ்காரம் செய்யுங்கள்; ‘பகவான்’ தொற்றுக்கும் இன்னும் தடுப்பூசியை வெளிநாட்டுக்காரன் கண்டு பிடிக்கவில்லை சார்; ஜாக்கிரதைங்கோ...

- உச்சநீதி மன்ற நீதிபதி எம்.வி.ரமணா, ஆந்திர அரசுக்கு எதிராக தீர்ப்புகளை வழங்க ஆந்திர உயர்நீதிமன்ற நீதிபதிகளிடம் செல்வாக்கு செலுத்துகிறார்.
  **- ஆந்திர முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டி புகார்**

  நல்லது; நீதிபதி ரமணா பதவி ஓய்வு பெற்ற அடுத்த நாள் ‘எம்.பி.’ பதவி உறுதியாகி விட்டது!

- வயது அதிகரிக்க அதிகரிக்க சிந்தனையில் மாற்றம் வரத்தான் செய்யும்.
  **- பா.ஜ.க.வின் இணைந்த குஷ்பு**

  அப்ப அடுத்த இரண்டு வருஷத்துல வேறு சிந்தனைக்கு போயிடுவீங்களா?

- கிராமப்புற மக்களுக்கு கடன் வாங்க சொத்து அட்டை.
  **-மோடி அறிவிப்பு**

  ஆண்டுக்கு 15 இலட்சம் வங்கியில் போடுவேன்னு சொன்னீங்க; இப்ப கடன் வாங்குறதுக்கு அட்டை கொடுக்கிறீங்க!

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
**ஆண்டுக்கட்டணம் ரூ.200**
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 7373684049
newsdvk@gmail.com

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 15th October 2020

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN